

ஒட்டன்சத்திரம் தொகுதியின் கழக வேட்பாளரும் உணவுத்துறை அமைச்சருமான அர.சக்கரபாணி தனது குடும்பத்தினருடன் கள்ளிமந்தயத்தில் உள்ள சிஎஸ்ஐ நடுநிலைப்பள்ளியில் ஜனநாயக கடமையை ஆற்றினார்.




மதுரை மாவட்டம் திருமங்கலம் சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தொகுதிக்குட்பட்ட முத்தப்பன்பட்டியில் அமைந்துள்ள அரசு பள்ளியில் குடும்பத்தினருடன் சென்று தனது வாக்கினை பதிவு செய்தார்.




திண்டுக்கல் புனித சின்னப்பர் உயர்நிலைப் பள்ளியில் பழனி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளர் என்.பாண்டி தனது வாக்கை செலுத்தி ஜனநாயக கடமை ஆற்றினார்.



வேலூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் ப.கார்த்திகேயன் தனது வாக்கை செலுத்தினார்.




திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூரில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் அ.செ.வில்வநாதன் ஓட்டு போட்டார்.



இராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன் வாக்கு பதிவு செய்ய வரிசையில் நின்று ஓட்டு போட்டார்.



சேந்தமங்கலம் சட்டமன்றத் தொகுதி தி.மு.க. வேட்பாளர் பூ மலர் பொன்னுசாமி கொல்லிமலை செம்மேட்டில் உள்ள கரையான்காடு அரசு துவக்கப் பள்ளியில் வாக்குச்சாவடி எண் 56 இல் தனது வாக்கினை செலுத்தினார்.



புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஓனான்குடி ஊராட்சிப்பள்ளியில்கேரள மாநில தி.மு.க. அமைப் பாளர் புதுக்கோட்டை கே.ஆர்.முருகேசன் தனது வாக்கை பதிவு செய்து ஜனநாயக கடமையை நிறை வேற்றினார்.



நெய்வேலி சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் கழக வேட்பாளர் , பண்ருட்டி தெற்கு ஒன்றிய கழக செயலாளர் சபா .இராஜேந்திரன் எம்.எல்.ஏ. தனது சொந்த கிராமம் சொரத்தூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில், குடும்பத்தினருடன் வருகை தந்து வாக்களித்தார்.




வேலூர் மாவட்டம் கே.வி.குப்பம் தொகுதியில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் ராஜேஸ்வரி வாக்கு பதிவு செய்தார்.

### 200க்கும் மேற்பட்ட தொகுதிகளில் கிடைக்கும் வெற்றிச் செய்தி –

# ‘திராவிட மாடல்’ ஆட்சிக்கு ஆதரவாக தமிழ்நாடு இருக்கிறது என்பதை நிரூபிக்கும்!

## திருச்சியில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன் பேட்டி!

திருச்சி , ஏப். 25 –

தேர்தலின் முடிவுகள் மே 4ஆம் நாள் வரும்போது இதை நிச்சயமாக நீங்கள் பார்ப்பீர்கள். 200க்கும் மேற்பட்ட தொகுதிகளில் கிடைக்கும் வெற்றி செய்தி திராவிட மாடல் ஆட்சிக்கு ஆதரவாக தமிழ்நாடு இருக்கிறது என்பதை நிரூபிக்கும் என்று திருச்சியில் வாக்கை பதிவு செய்த பின் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே. எம். காதர் மொகிதீன் தெரிவித்தார்.

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 23.04.2026 வியாழக் கிழமை நடைபெற்றது. இந்த தேர்தலில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசிய தலைவர் பேராசிரியர் கே. எம். காதர் மொகிதீன் தனது குடும்பத்தினருடன் திருச்சி காஜாமியான் மேல்நிலைப் பள்ளியில் காலை 10. 30 மணிக்கு தனது வாக்குப்பதிவினை செலுத்தி ஜனநாயக கடமை ஆற்றினார்.

பின்னர் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது : முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுடைய ஆட்சி ஐந்தாண்டு காலமாக மிகச் சிறப்பாக நடந்திருக்கிறது. இந்திய மாநிலங்களுக்கெல்லாம் முன்மாதிரியான ஆட்சியாக அது பாராட்டப்பட்டிருக்கிறது. கடல் கடந்த நாடுகளிலும் தமிழ்நாட்டினுடைய ஆட்சி, அதன் சாதனைகள், அவர்கள் எல்லாத் தரப்பு மக்களுக்கும் செய்திருக்கிற நலத்திட்ட பணிகள் என அத்தனையும் பேசு பொருட்கள் ஆகியிருக்கின்றன.

கனடா, இலங்கை போன்ற நாடுகளில் கூட தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் கொண்டு வந்த காலை உணவுத் திட்டம் போன்ற மக்கள் நலத்திட்டங்கள் பரவலாகப் பேசப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டு, நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பதை நீங்களெல்லாம் அறிவீர்கள்.



ஐந்தாண்டு ஆட்சிக்காலத்தை மிகச் சிறப்பான முறையில் திராவிட மாடல் அரசு நிறைவு செய்துள்ள நிலையில், மக்கள் யாவரின் மிகுந்த எதிர்பார்ப்புகளுக்கு இடையே, இன்று காலை 7 மணி முதல் தொடர்ந்து வாக்குப்பதிவு நடந்து கொண்டிருக்கிறது. எல்லா தரப்பு மக்களும் ஸ்டாலின் அவர்களுடைய தலைமையிலான கூட்டணிக்கு அமோகமான ஆதரவையும், வரவேற்பையும் அளித்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற தகவல் வந்து கொண்டிருக்கிறது.

இதுவரை வந்திருக்கக்கூடிய தகவலின் அடிப்படையில் பார்த்தால் கூட, தமிழ்நாட்டில் 234 தொகுதிகளிலும் திராவிட முன்னேற்ற கழகம் தலைமையிலான கூட்டணி நிச்சயமாக வெற்றி பெறும் என்பதுதான் கணிக்கப்பட்டிருக்கிறது. கடந்த ஐந்தாண்டு காலமாக முதலமைச்சர் ஸ்டாலின் அவர்களுடைய தலைமையில் நடந்த திராவிட மாடல் ஆட்சி ஆட்சி, தமிழ்நாட்டை ஒட்டுமொத்த இந்தியாவிலும் முதல் மாநிலமாக ஆக்கியிருக்கிறது.

இந்தியாவில் உள்ள எல்லா மாநிலங்களுக்கும்முன்மாதிரியான மாநிலம் தமிழ்நாடுதான் எனும் அளவுக்கு கல்வித் துறை, நிதித் துறை, சுகாதாரத் துறை, மக்கள் நல்வாழ்வு என எந்தத் துறையை எடுத்துக்கொண்டாலும் தமிழ்நாடு முதல் நிலை, முன்னிலை மாநிலமாகத்தான் மிளிர்ந்து கொண்டிருக்கிறது.

கடந்த ஐந்தாண்டு காலத்தில் திராவிட மாடல் ஆட்சி எந்தளவுக்கு மக்கள் மனதில் நீக்கமற நிறைந்து இருக்கிறது, அனைத்து மக்களின் ஒத்துழைப்புடன் வெற்றிகரமாக ஆட்சி நடந்திருக்கிறது என்பதையே இது வெளிப்படுத்துகிறது. அதனால்தான் ”ஸ்டாலின் தொடரட்டும்! தமிழ்நாடு வெல்லட்டும்!!” என்ற முழக்கம் தமிழ்நாடு முழுவதும் கேட்டுக் கொண்டே இருக்கிறது.

ஆக, இந்தத் தேர்தலிலே சென்ற முறை பெற்ற தொகுதிகளை விட அதிக அளவில் அதாவது 200க்கும் மேற்பட்ட தொகுதிகளில் திராவிட முன்னேற்றக் கழகம் தலைமையிலான கூட்டணி வெற்றி பெறும். திரும்பவும் திராவிட மாடல் ஆட்சி அமையும். ”ஸ்டாலின் தொடரட்டும் தமிழ்நாடு மிளிரட்டும்” என்ற முழக்கம் இன்று கேட்பது போல இனியும் என்றென்றும், எங்கும் கேட்கும் இன்று நான் நம்புகிறேன்.

கேள்வி: இந்திய யூனியன் முஸ்லிம் லீக் போட்டியிடும் இரண்டு தொகுதிகளில் உங்களது வெற்றி வாய்ப்பு எப்படி உள்ளது?

பதில் : இந்திய யூனியன் முஸ்லிம் லீகைப் பொருத்த வரை, வாணியம்பாடி, பாபநாசம் ஆகிய இரண்டு தொகுதிகளில் நாங்கள் போட்டியிடுகிறோம். இரண்டு தொகுதிகளிலும் மக்களிடையே நல்ல வரவேற்பு இருக்கிறது.

அந்த இரண்டு தொகுதிகளையும் சேர்த்துதான் சொல்கிறேன், தமிழகத்திலே ஸ்டாலினுடைய ஆட்சியின் பெருமையை உணர்ந்து 200க்கும் மேற்பட்ட தொகுதிகளில் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியை அமோக வெற்றி பெறச் செய்வார்கள் என்றார்.

## திருவோணம் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர்

# கே.டி.மகேஷ் கிருஷ்ணசாமி தந்தை மறைவு!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஏப். 25 -

திருவோணம் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் கே.டி.மகேஷ்கிருஷ்ணசாமியின் தந்தையும் கழக முன்னோடியுமான கே.தங்கராசு இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தியறிந்த கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை கே.டி.மகேஷ் கிருஷ்ணசாமிக்கு தெரிவித்துள்ளார்.

தஞ்சாவூர் மத்திய மாவட்டம் திருவோணம் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.டி.மகேஷ்கிருஷ்ணசாமி, கே.டி.பிரபு ஆகியோரின் தந்தையும், திருவோணம் முன்னாள் ஒன்றியக் கழகச் செயலாளருமான சில்லத்தூர் கே.தங்கராசு அவர்கள் நேற்று முன்தினம் (23. 04.2026 - வியாழன்) காலை இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைந்த தங்கராசு அவர்கள் பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் ஆகியோர் மீது அதீதமான அன்பு கொண்டவர். கழகம் அறிவித்த அனைத்து ஆர்ப்பாட்டங்கள் போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர். இவர் சில்லத்தூர் ஊராட்சி மன்ற தலைவராகவும், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினராகவும் மக்கள் பணியாற்றி திருவோணம் ஒன்றிய கழகச்செயலாளராகவும் கழக பணியாற்றியவர்.

கே.தங்கராசுவின் மறைவுச் செய்தியறிந்த கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை கே.டி.மகேஷ் கிருஷ்ணசாமிக்கு தெரிவித்துள்ளார்.

### கோடைகாலத்தையொட்டி மின்தேவை புதிய உச்சம்!

# ஒரே நாளில் 21 ஆயிரம் மெகாவாட் பதிவு!

## நடப்பாண்டில் 2வது முறையாக அளவைத் தாண்டியது!

*சென்னை, ஏப். 25 -*

*கோடைக்காலத்தையொட்டி தமிழகத்தில் மின் தேவை ஒரே நாளில் 21 ஆயிரம் மெகாவாட் பதிவாகியுள்ளதாக மின் வாரிய அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர். தமிழகத்தில் வெப்ப அலை வீசுவதால் பொது மக்கள் வெளியே செல்ல அச்சப்பட்டுவீட்டிலேயே முடங்கி கிடக்கும் நிலை உருவாகி உள்ளது. இதன் காரணமாக வீடுகளில் இருக்கும் ஏசி, மின் விசிறி, டிவி, ஃபிர்ஜ் போன்றவற்றின் பயன்பாடு அதிகரித்து வருகிறது. அதன்படி, நடப்பாண்டில் இம்மாதம் மின்சார தேவை வெகுவாக அதிகரித்துள்ளது.*

*முன்னதாக ஏப்ரல் 17ம் தேதி 21 ஆயிரத்தை தாண்டி மின் தேவை இருந்தது. இந்நிலையில் 2வது முறையாக ஏப்ரல் 21ம் தேதி (செவ்வாய்க் கிழமை) 21 ஆயிரத்தை தாண்டியுள்ளதாக மின் வாரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். குறிப்பாக கடந்த செவ்வாய்க் கிழமை இரவு 10.30 மணியளவில் அதிகப்படியான மின் தேவை ஏற்பட்டிருப்பது ஆச்சரியம் அளித்துள்ளது. உதாரணமாக ஏப்ரல் 21ம் தேதி மின்சார பயன்பாடு 462.38 மில்லியன் யூனிட்களாக இருந்தது. அதில் தமிழக மின்சார வாரியத்தின் நடவடிக்கையால் நிலக்கரி, எரிவாயு, ஹைட்ரோ பிளா ண்ட்கள் மூலம் 77 மில்லியன் யூனிட்கள் கிடைத்தன.*

*மத்திய பவர் பிளாண்ட்கள் மூலம் 127 மில்லியன் யூனிட்கள் பெறப்பட்டன. எஞ்சிய 86.5 மில்லியன் யூனிட்கள் வெளி சந்தையில் குறுகிய மற்றும் நீண்ட கால ஒப்பந்த அடிப்படையில் வாங்கப்பட்டவையாகும். இதுகுறித்து அதிகாரிகள் கூறியதாவது: இன்னும், கத்திரி வெயில் தாக்கம் தொடங்காத நிலையில் இது போன்ற தேவைகள் உருவாகி உள்ளது இது வாரியத்திற்கு ஒரு சவாலானது தான். காரணம் பள்ளி, கல்லூரிகள் விடுமுறை என்பதால் மாணவ, மாணவிகள் வீடுகளில் முடங்கும் நிலை ஏற்பட்டுள்ளது.*

*எனவே மின் விசிறி, ஏசி, கூலர் போன்றவற்றின் பயன்பாடு அதிகரித்துள்ளது. ஏற்கனவே அரசு அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள், வர்த்தக கட்டடங்கள், பொழுது போக்கு கூடங்கள், மால்கள் உள்ளிட்டவற்றின் ஏசி பயன்பாடு அதிகமாக இருக்கும். இதனுடன் வீடுகளிலும் ஏசி பயன்பாடு அதிகரித்திருக்கிறது. முன்பு பணம் படைத்தவர்களின் வீடுகளில் இருந்த ஏசி மற்றும் ஃபிரிஜ் போன்ற உபயோக பொருட்கள் இப்போது நடுத்தர குடு ம்பங்களிலும் வந்துள்ளதால், மின் தேவை என்பது இயல்பாகவே அதிகரிக்கும்.*

*அதனை சமாளிக்கதான் பல்வேறு வழிகளில் மாநிலத்தில் தடையின்றி மின்சாரத்தை வழங்குவதில் மின்வாரியம் முனைப்பு காட்டுகிறது. நிலக்கரி எரிபொருள் மட்டுமின்றி சூரிய சக்தியையை பயன்படுத்தி மின்சார தயாரிப்பை முடுக்கி விட்டுள்ளோம். இதுதவிர, சூரிய மின் சக்தி, காற்றாலை போன்வற்றில் இருந்தும் மின்சார தேவை பூர்த்தி செய்யும் வகையில் உற்பத்தி செய்யப்படுகிறது.*

*மேலும், கோடைகாலத்தை கருத்தில் கொண்டு பொதுமக்களும் சிக்கனமாக மின்சாரத்தை கையாளும் பட்சத்தின் மின்வெட்டு பிரச்சினை என்பது இருக்காது அதனையும் விழி ப்புணர்வாக நுகர்வோரிடம் எடுத்து செல்ல திட்டமிட்டுள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.*